

கன்னியாகுமரி மேற்கு மாவட்டத்தில் ஒன்றிய - நகர - பேரூர் வாரியாக

# திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கி தெருமுனைக் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் மனோ தங்கராஜ் அறிவிப்பு

**பத்தாண்டு கால அவல ஆட்சியால் இருண்ட தமிழ்நாட்டின் முதல்வராக பொறுப்பேற்று, சீர்கேடுகளைக் களைந்து சிறப்பாக நிர்வகித்து, கொரோனா கால நெருக்கடிகளை திறம்பட கையாண்டு மக்களின் இன்னுயிரை காத்து, குழந்தைகளுக்கு ஊட்டசத்தை உறுதிசெய்யும் திட்டம் தந்து, மகளிர்க்கு கட்டணமில்லா பேருந்து திட்டத்தை நடைமுறைபடுத்தி, உரிமை தொகை திட்டத்திற்கு உத்தரவிட்டு, மாணவ மாணவிகள் கல்வி பெறுதலை மேம்படுத்த நான் முதல்வன் புதுமை பெண் திட்டங்களை தந்து, இன்னுயிர்காக்கும் 48 மணிநேரம் மூலம் குடும்பநலன் காத்து, மாநில சுயாட்சியை வலியுறுத்தி, அரசு வேலை தமிழர்க்கே என்பதை நிலைநிறுத்தி, 1 டிரிலியன் டாலர் பொருளாதாரத்தை நோக்கி தமிழ்நாட்டை வழிநடத்தி செல்லும் பார் வியக்கும் செயலாற்றல் வீரர், கழக தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் இரண்டாண்டு சாதனையை விளக்கும் வகையில் இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுதுறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கு இணங்க கன்னியாகுமரி மேற்கு மாவட்டத்தில் இளைஞரணி சார்பில் ஒன்றியம் நகரம் பேரூர் வாரியாக பின்வரும் இடங்களில் திராவிட மாடல் ஆட்சியின் இரண்டாண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்..**

| ஒன்றியம் – நகரம்– பேரூர் | நேரம் | இடம் | பேச்சாளர் |
|---|---|---|---|
| **நாள் : 27.05.2023 சனிக்கிழமை** | | | |
| முஞ்சிறை கிழக்கு ஒன்றியம் | மாலை 5 மணி | புதுக்கடை | சிலம்பை டென்னிசன். இராஜ் |
| மேல்புறம் தெற்கு ஒன்றியம் | மாலை 5 மணி | வெள்ளாங்கோடு | சௌந்தர், ராஜபோஸ் |
| தக்கலை வடக்கு ஒன்றியம் | மாலை 5 மணி | திருவிதாங்கோடு | என்.ஆர்.மணி |
| திருவட்டார் வடக்கு ஒன்றியம் | மாலை 5 மணி | கான்வென்ட் சந்திப்பு, குலேசேகரம் | வழக்கறிஞர் பிரவீன் வீர வர்க்கீஸ் |
| **நாள் : 28.05.2023 ஞாயிற்றுக்கிழமை** | | | |
| கிள்ளியூர் தெற்கு ஒன்றியம் | மாலை 5 மணி | உதயமார்த்தாண்டம் | என்.ஆர்.மணி, சுரேஷ்குமார் |
| முஞ்சிறை மேற்கு ஒன்றியம் | மாலை 5 மணி | நடைக்காவு | சௌந்தர்ராஜ், ராஜபோஸ் |
| திருவட்டார் தெற்கு ஒன்றியம் | மாலை 5 மணி | கொல்வேல், திருவட்டர். | வழக்கறிஞர் பிரவீன் சுபாஷ் சந்திரபோஸ் |
| பத்மனாபபுரம் நகரம் | மாலை 5 மணி | மணலி | சிலம்பை டென்னிசன்,இராஜ் |
| **நாள் : 29.05.2023 திங்கள்ழகிமை** | | | |
| மேல்புறம் வடக்கு ஒன்றியம் | மாலை 5 மணி | மேல்புறம் சந்திப்பு | பிரவீன், சுபாஷ் சந்திரபோஸ் |
| குழித்துறை நகரம் | மாலை 5 மணி | கழுவன்திட்டை | என்.ஆர்.மணி, தினகர் |
| கொல்லங்கோடு நகரம் | மாலை 5 மணி | கலிங்கராஜபுரம் | சௌந்தர்ராஜ், ராஜபோஸ் |
| கிள்ளியூர் வடக்கு ஒன்றியம் | மாலை 5 மணி | நல்லூர் முளங்குழி | சிலம்பை டென்னிசன் சுரேஷ் குமார் |
| **நாள் : 30.05.2023 செவ்வாய்க்கிழமை** | | | |
| முஞ்சிறை கிழக்கு ஒன்றியம் | மாலை 5 மணி | ஆலன்கோடு வாவறை ஊராட்சி | வழக்கறிஞர் பிரவீன் வீர வர்க்கீஸ் |
| மேல்புறம் தெற்கு ஒன்றியம் | மாலை 5 மணி | பாகோடு ஞாறாம்விளை | சிலம்பை டென்னிசன் ராஜபோஸ் |
| தக்கலை வடக்கு ஒன்றியம் | மாலை 5 மணி | கோதநல்லூர் ஈத்தவிளை | சௌந்தர்ராஜ், இராஜ் |
| திருவட்டார் வடக்கு ஒன்றியம் | மாலை 5 மணி | கடம்பம் மூடு, பேச்சிப்பாறை | என்.ஆர்..மணி சுரேஷ் குமார் |
| **நாள் : 31.05.2023 புதன்கிழமை** | | | |
| கிள்ளியூர் தெற்கு ஒன்றியம் | மாலை 5 மணி | பாலபள்ளம் | சௌந்தர்ராஜ் , இராஜ் |
| முஞ்சிறை மேற்கு ஒன்றியம் | மாலை 5 மணி | சூழால் | என்.ஆர்.மணி சுபாஸ் சந்திரபோஸ் |
| திருவட்டார் தெற்கு ஒன்றியம் | மாலை 5 மணி | குமரன்குடி மங்காடு | சிலம்பை டென்னிசன் சுரேஷ் குமார் |
| பத்மனாபபுரம் நகரம் | மாலை 5 மணி | புலியூர்குறிச்சி | பிரவீன், வீர வர்க்கீஸ் |
| **நாள் : 01.06.2023 வியாழக்கிழமை** | | | |
| மேல்புறம் வடக்கு ஒன்றியம் | மாலை 5 மணி | கண்ணுமாமூடு | சிலம்பை டென்னிசன் |
| குழித்துறை நகரம் | மாலை 5 மணி | குழித்துறை | பிரவீன், ராஜபோஸ் |
| கிள்ளியூர் வடக்கு ஒன்றியம் | மாலை 5 மணி | உண்ணாமலை கடை சந்திப்பு | சௌந்தர்ராஜ், சுபாஸ் சந்திரபோஸ் |
| கொல்லங்கோடு நகரம் | மாலை 5 மணி | கச்சேரி நடை | பிரவீன், இராஜ் |

அமைச்சர் **மனோ தங்கராஜ்**
செயலாளர்,
கன்னியாகுமரி மேற்கு மாவட்ட தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## இராயபுரம் சி. நவமணி
## மே 27 (2012)



**இராயபுரம் பகுதிக் கழக அவைத்தலைவராகவும், தமிழக அனைத்து வணிகர்கள் சங்கத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**"தம்பி நவமணி என்னிடம் பாசமும், நேசமும் கொண்டவர். வணிகர்கள் சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினை என்றாலும் நேரில் என்னை வந்து சந்தித்து, அதுகுறித்து விவாதிக்க அவர் தவறியதே இல்லை. வணிகர்களுக்கும், கழகத்திற்கும் இடையே ஒரு பாலமாக செயல்பட்டவர்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## தென்மாவட்ட ரெயில்களின் வேகத்தை அதிகரிக்க முடிவு

சென்னை, மே 26-

மதுரையில் இருந்து நாகர் கோவிலுக்கு இரட்டை ரெயில் பாதை அமைக்கும் பணி நடைபெற்று வந்தது. இதில் மதுரை முதல் திருநெல் வேலி வரையிலான பணி நிறைவடைந்துள்ளது. மேலும், வாஞ்சி மணியாச்சி முதல் தூத்துக்குடி வரையும், திருநெல்வேலி முதல் நாகர் கோவில் வரையும் இரட்டை ரெயில்பாதை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இப்பணி இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில் அங்கு இயக்கப்படும் ரெயில்களின் வேகம் அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்பை விட 10 முதல் 20 நிமிடங்கள் முன்னதாக வந்து சேரும்.



திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் படகு குழாம்களை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

### மின் மயானம், புதிய வளமீட்புப் பூங்கா அமைக்க நடவடிக்கை

# சின்னாளபட்டியில் அமைச்சர் ஐ.பெரியசாமி பொதுமக்களிடம் குறைகள் கேட்டறிந்தார்!

## 18 வார்டுகளுக்கும் நலத்திட்டப்பணிகள் பகிர்ந்தளிக்க அமைச்சர் உத்தரவு!

சின்னாளபட்டி, மே 27 -

சின்னாளபட்டியில் ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரிய சாமி பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். சின்னாள பட்டியில் மின் மயானம், புதிய வளமீட்பு பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சின்னாள பட்டியில் 18 வார்டுகளுக்கும் நலத் திட்டப்பணிகளை பகிர்ந்தளிக்க அதிகாரிகளுக்கு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உத்தரவிட்டார்.

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டியில் திருமணவிழா மற்றும் குடமுழுக்கு விழா கட்சி நிர்வாகிகளின் இல்லவிழாக்களுக்கு வருகைதந்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அப்பகுதியில் உள்ள பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

அப்போது பொதுமக்கள் தங்களுக்கு முதியோர் நிவாரண உதவித்தொகை தாமதமின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டு கோள்விடுத்தனர்.

அப்போது சின்னாளபட்டியைச் சேர்ந்த வார்டு உறுப்பினர்கள் தங்கள் வார்டுகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டுமென கோரிக்கைவிடுத்தனர்.

அப்போது பொதுமக்கள் மற்றும் வார்டு உறுப்பினர்கள் மத்தியில் பேசிய ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி சின்னாள பட்டியில் உள்ள 18 வார்டுகளுக்கும் பாரபட்சமின்றி நலத்திட்டங்களை செயல்படுத்த அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன் என கூறியதோடு சின்னாள பட்டியில் ஏழை நெசவாளர்கள் மற்றும் நலிவுற்றோருக்கு குடியிருப்புகள் கட்ட இடங்களை தேர்வு செய்து வருவதாகவும் கூறினார்.

பொதுமக்கள் சிலர் மயானங்களை மேம்படுத்த வேண்டுமென வேண்டுகோள் விடுத்தனர்.

அதற்கு பதில் அளித்த ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி சின்னாளபட்டியில் மின் மயானத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு வருவதாகவும் பொதுமக்கள் பங்களிப்போடு செயல்படுத்தினால் மின்மயான திட்டம் சிறப்பாக செயல்படும் என்பதால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறியதோடு நகரின் வளர்ச்சிக்கு ஏற்ப புதிய இடத்தில் வளமீட்பு பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

நிகழ்ச்சியின் போது தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய பெருந்தலைவா மகேஸ்வரி முருகேசன், பேரூராட்சிமன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத்தலைவர் ஆனந்தி பாரதிராஜா, பேரூர் கழக செயலாளர் மோகன், துணைச் செயலாளர் எம்.ஆர்.எஸ். ஜெயக்கிருஷ்ணன், பொருளாளர் எஸ். ஆர். முருகன், மாவட்ட பிரதிநிதி பத்மாவதி ராஜகணேஷ், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ராஜகணேஷ்,

மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் வாஞ்சிநாதன், நகர இளைஞர் அணியை சேர்ந்த மணிமாறன், மெடிக்கல் கோபி, பேரூராட்சி செயல் அலுவலர் செல்வராஜ், துப்புரவு மேற்பார்வையாளர் தங்கத்துரை, பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் செல்வகுமாரி, ஹேமா, ராஜசேகரன், ராஜீ, அமுல்ராஜ், வேல்விழி, சாந்தி, தாமரைச்செல்வி, ஒன்றிய பிரதிநிதிகள் வடக்குதெரு சந்திரன், ஜீவாநகர் தங்கபாண்டி, இளைஞர் அணியைச் சேர்ந்த கேபிள் ராஜா உட்பட தி,மு,க, நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

### குன்றக்குடியில்

# தவத்திரு குன்றக்குடி அடிகளார் சிலைக்கு மாலை அணிவிப்பு!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மரியாதை!

சிவகங்கை. மே 27 -

சிவகங்கை மாவட்டத்தில் பல்வேறு திருமண நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக வருகை தந்த மாநில இளைஞரணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் குன்றக்குடிக்கு வருகைதந்தார்.

குன்றக்குடி மடத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் சால்வை அணிவித்து வரவேற்றார். அதனைத் தொடர்ந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் குன்றக்குடியின் 45 வது மடாதிபதி திருவண்ணாமலை ஆதீனம் தெய்வசிகாமணி அடிகளார் என்று அழைக்கப்படும் குன்றக்குடி அடிகளாரின் மணிமண்டபத்திற்குச் சென்றார். அங்கு குன்றக்குடி அடிகளாரின் திருஉருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

மணிமண்டபத்தில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் கலந்து கொண்ட நிகழ்வுகள் தொடர்பான பல்வேறு புகைப்படங்களை பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், அமைச்சர்கள் கே.ஆர். பெரிய கருப்பன், எஸ்.ரகுபதி, மா.சுப்பிரமணியன், சிவ.வீ.மெய்யநாதன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் கள் த.சேங்கை மாறன், கே.எஸ். எம். மணிமுத்து உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள். முன்னதாக காரைக்குடியில் அமைச்சர் உதயநிதிஸ்டாலினை புதிதாகப் பொறுப்பு ஏற்றுள்ள சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் மலர்க் கூடை, புத்தகம் கொடுத்து சந்தித்தார்.

### தமிழ்நாட்டில் பள்ளிகளில்

# தமிழ் கட்டாய பாடம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

சென்னை, மே 27 -

வரும் கல்வியாண்டு முதல் "தமிழ் கட்டாய பாடம்" என்பதை தனியார் பள்ளிகள் சரியாக பின்பற்றுகிறார்களா? தமிழாசிரியர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்களா? என்பதை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என அமைச்சர் அன்பில் மகேஷ் வலியுறுத்தியுள்ளார்.

மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுடனான இணையவழி கூட்டத்தில் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வலியுறுத்தியுள்ளார்.

# இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



**தோற்றம்**
**16.06.1954**

**மறைவு**
**27.05.2021**

வழக்கறிஞர்
# D. பன்னீர்செல்வம்
அவர்கள்
காரைக்குடி

**கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்...**
**எங்கள் முன்னே உங்கள் முகம்**
**எந்நாளும் உயிர் வாழும்...**

**என்றென்றும் உங்கள் நினைவில்...**

மனைவி : **P. துளசி**

மகன் : **P.T. ராகேஷ்** வழக்கறிஞர் | மருமகள் : **S. சந்தியா ராகேஷ்**